1st March 1955]

THE HON. SRI B. PARAMESWARAN :—" பணம் இல்லாத காரணம்தான். ஆனால் அவர்களுக்கும் ஸ்காலர்ஷிப் கொடுப்பதற் காக அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறது."

SRI S. RAMALINGAM :—" மாணவர்களுக்கு மூன்று மாதத்திற்கு ஒருதரம் ஸ்காலர்ஷிப் வருகிறது. ஆனால் 4, 5 மாதம் ஆகியும் அவர் களுக்கு வந்துசேருவது கிடையாது. ஆதலால் அவர்களுக்கு அதிக தொந்திரவு ஏற்படுகிறது. கனம் மந்திரி அவர்கள் இதை கவனித்து ஆவனசெய்வாரா ?"

THE HON. SRI B. PARAMESWARAN :—" இதைப்பற்றி உத்திரவு போட்டிருக்கிறோம். சில கல்லூரி அதிகாரிகள் கவனிக்காமல் இருக்கலாம். குறைபாடுகளை அரசாங்கத்தின் கவனத்திற்கு அவ்வப் போது கொண்டுவந்தால் அவை கவனிக்கப்படும்."

SRI P. G. MANICKAM :—" சென்ற வருடம், அதாவது 1954–55-ம் வருடத்தில் உபகாரச் சம்பளத்திற்காக பட்ஜெட்டில் 5,98,000 ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்த வருடமும் அதே தொகைதான் ஒதுக்கப் பட்டிருக்கிறது. ஆகையால், இந்தத் தொகை பழைய மாணவர்களின் உபகாரச் சம்பளத்திற்குத்தான் சரியாக இருக்கும். மேற்கொண்டு புதிய மாணவர்கள் மனுக்கள் போட்டால், அவர்களுக்குச் சலுகை கொடுப்பதற்கு இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஏதாவது வழிவகை செய்யப் பட்டிருக்கிறதா என்று கேட்கிறேன் ?" 9-10 a.m.

THE HON. SRI B. PARAMESWARAN :—" அவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதற்கு பட்ஜெட்டில் வழிவகை செய்யப் பட்டிருக்கிறது."

SRI A. SAMBASIVAM :—" இந்த உதவி நிதி மிகவும் கஷ்டப் படுகிற ஏழைகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஒரு சிலர் ஜாதியை மாற்றிச் சொல்லியும், இன்னும் வருமானத்தைக் குறைத்துச் சொல்லியும் தாசில்தார்களிடமிருந்து ஸெர்டிபிகேட்டுகள் வாங்கி வந்துவிடுகிறார்கள். பொதுவாக தாசில்தார்கள் இந்த விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்றும், தவறாக நடந்தால் அவர்கள் மீது தக்க நட வடிக்கைகள் எடுக்கப்படுமென்றும் கண்டிப்பான ஒரு உத்திரவு பிறப் பிக்கப்படுமா ?"

THE HON. SRI B. PARAMESWARAN :—" அந்த மாதிரி உத்திரவு அனுப்பியிருக்கிறோம். இரண்டொரு தாசில்தார்களையும் தண்டித்து இருக்கிறோம். தாசில்தார்கள் தவிர, இன்னும் வேறு யாரைக் கொண்டு இந்த ஸெர்ட்டிபிகேட்டுகளைக் கொடுக்கச் செய்யலா மென்றும் பரிசீலித்து வருகிறோம். ஏப்ரல் மாதத்திற்குள் ஒரு முடிவுக்கு வருவோம்."

Judicial Magistrate's Court, Mayuram

* 996 *Q.*—SRI M. P. SUBRAMANYAM (on behalf of Sri K. R. Sambandam): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have any proposal for the construction of a building for the Judicial Magistrate's Court at Mayuram in Tanjore district;

(*b*) if so, whether any site has been selected for the same; and

(*c*) the rent paid for the building in which the court is located at present?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" (*a*) & (*d*) No, Sir.

" (*c*) The rents paid for the buildings in which the Subdivisional Magistrate's Court and the Sub-Magistrate's Court, Mayuram, are located are Rs. 45 per mensem and Rs. 60 per mensem respectively."

SRI S. SWAYAMPRAKASAM :—" Sir, the building now occupied by the Subdivisional Magistrate's Court is not at all suitable. Will the Government be pleased to issue instructions to the authorities concerned to find a suitable building? The building which was originally occupied by the Sub-Magistrate's Court before the separation of the judiciary from the executive is vacant besides many other suitable buildings. Will the Government take this aspect also into consideration and give instructions to utilize the existing building for the purpose? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, the building which was previously occupied by the Sub-Magistrate's Court during pre-separation days was required for the Taluk Office and that is why it has been handed over to the Revenue Department. No doubt, we have received a report from the Judicial District Magistrate that the building which is at present occupied by the Subdivisional Magistrate's Court is very inconvenient and I would request the co-operation of the hon. Member in finding out a suitable building at Mayuram to which this court would be transferred. Also, the possibility of inducing some private persons to put up buildings according to specifications and taking it over for rent is under the consideration of the Government."

SRI M. NARAYANA KURUP :—" Sir, in many places excellent buildings which are available and in the possession of the Revenue Department are lying vacant but, at the same time, these Judicial Sub-Magistrates' Courts are functioning in the most inconvenient and undesirable places. Will the Government see that this sort of aloofness between the two departments does not prevail and that necessary adjustments are made to provide suitable buildings for both the departments? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, this question relates to Mayuram. But, apart from this fact, if the hon. Member has in his possession information with regard to buildings lying vacant, I shall certainly welcome that information. But, it is a wrong impression that there are buildings lying vacant. Wherever buildings are available and whether they belong to the Revenue Department or any other department they are being properly utilized. Also, the separation has taken place only recently and the problem of accommodation can be solved only in due course."

SRI S. RAMALINGAM :—" மாயவரத்திலே நீதி நிர்வாகப் பிரிவினைக்கு முன்பு ஒரு ஸப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் கோர்ட்டு இருந்தது. என் அதே கோர்ட்டில் ஜுடிஷியல் மாஜிஸ்டிரேட் கோர்ட்டை வைத்து நடத்தக்கூடாது என்று ஸ்ரீ சுயம்பிரகாசம் அவர்கள் கேட்டார்கள். அதற்கு கனம் மந்திரி அவர்கள் நேரடியான பதில் கொடுக்கவில்லை."

1st March 1955]

THE HON. SRI C. SUBRAMANIAM :—" பிரிவினைக்கு முன்னால் மாயவரத்தில் மாஜிஸ்டிரேட் கோர்ட்டு தாலூகா ஆபீஸ் கட்டிடத்தில் இருந்து வந்தது. பிரிவினைக்குப் பிறகு தாலூகா ஆபீசிற்கு இந்தக் கட்டடம் பூராவும் வேண்டுமென்று சொன்னதால், இந்தக் கட்டிடத்தை ரெவின்யூ டிபார்ட்மெண்டுக்கு கொடுக்கப்பட்டு விட்டது. சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் கோர்ட்டிற்கு வேண்டிய ஒரு நல்ல கட்டிடத்தை நிறுவ பிரயத்தனங்கள் நடந்துகொண்டிருக்கின்றன."

SRI C. MUTHIA PILLAI :—" ரெவின்யூ கோர்ட் தாலூகா ஆபீசில் நடப்பதாலும், ஸ்ரீ சுயம்பிரகாசம் அவர்கள் அங்கே போய் ஆஜர் ஆவதாலும், அந்தக் கட்டிடம் தாலூகா ஆபீசுக்கே அவசியமென்பதை கனம் மந்திரி அவர்கள் உணருவார்களா ?" (சிரிப்பு.)

THE HON. SRI C. SUBRAMANIAM :—" அந்தக் காரணத்தினால்தான் அங்கே ரெவின்யூ கோர்ட்டு நடந்து கொண்டிருக்கிறது. ஸ்ரீ சுயம்பிரகாசம் இந்தக் கோர்ட்டுக்கு முன்னால் ஆஜராக வேண்டியிருப்பதினால், அந்தக் கட்டிடத்தை ரெவின்யூ டிபார்ட்மெண்டு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கனம் அங்கத்தினர் எடுத்துக் காட்டுகிறார்கள்." (சிரிப்பு.)

SRI S. SWAYAMPRAKASAM :—" ரெவின்யூ ஹெட்குவார்ட்டர்ஸ் மாயவரம் அல்ல என்பதையும், கும்பகோணம்தான் என்பதையும் கனம் அங்கத்தினருக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஒரு நாளோ அல்லது இரண்டு நாட்களோ அவர் அங்கே போயிருக்கலாம். மாயவரத்தில் ரெவின்யூ கோர்ட்டு கிடையாது. அதற்கு அங்கே அவசியமில்லை என்பதை கனம் அங்கத்தினர் உணருவாரா ?"

THE HON. SRI C. SUBRAMANIAM :—" கனம் அங்கத்தினர்கள் ஸ்ரீ முத்தையா பிள்ளையும், ஸ்ரீ சுயம்பிரகாசமும் தனியாக உட்கார்ந்து ஒரு முடிவுக்கு வருவார்களேயானால், அந்த முடிவை ஏற்றுக்கொள்வதுபற்றி அரசாங்கம் யோசிக்கும்." (சிரிப்பு.)

South Malabar District Agricultural office

* 997 *Q.*—SRI M. NARAYANA KURUP : Will the Hon. the the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal under consideration of the Government to shift the South Malabar District Agricultural office from Shoranur; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" (*a*) The Government have accepted a proposal made by the Director of Agriculture to shift the office of the District Agricultural Officer, South Malabar, from Shoranur to Kozhikode.

" (*b*) Shoranur is not now occupying a central position in the district geographically, so far as the Agricultural Department is concerned. It is a small town with very limited building accommodation. It has no sub-treasury and workshop facilities for repairs of jeeps, lorries, etc. It is 65 miles away from Kozhikode, the district headquarters, and it is not therefore, possible now for the District Agricultural Officer, South Malabar, to be in touch with the Collector and other district officers concerned as often as this is necessary in the interests of the departmental activities."